# குதம்பைச் சித்தரின் யோக வாழ்வியல்

69

**ரா.கிருத்திகா & முனைவர் ச.பிரியதர்சினி**

**முதுகலை இரண்டாமாண்டு தமிழ், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,**

**கோயம்புத்தூர் – 43**

Priyadharshini_tam@avinuty.ac.in

ORCid: https://orcid.org/0009-0009-1121-5502

**ஆய்வு சுருக்கம்:**

தமிழ் இலக்கியங்களில் பல இலக்கிய வகைகள்உள்ளன. அவ்விலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இலக்கியமாக கருதப்படுவது சித்தர் இலக்கியம் ஆகும். சித்தர் இலக்கியத்தில்பல சித்தர்களின்வாழ்வியலும்,தத்துவமும், அவர்களின் தனிச்சிறப்பும் சித்த நெறிமுறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சித்தர்களில் பதினெண் சித்தர்கள் மிகவும் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர். சித்தர்கள் என்ற சொல் சித்தி பெற்றவர்கள் என்று அழைக்கப்படுகின்றன. வீட்டின்பம் அடையதவர்கள் என கூறப்படுகிறது. சமண மதத்திலும்' புத்த மதத்திலும் சித்தர்களை சாரணர் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு மனிதானவாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவு வரை சித்தர்களின் வாழ்க்கை நெறியானது பின்பற்றப்படுகிறது.சித்தர்கள் 16 நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு முடிய இருந்தவர்களே. சித்தர்கள் என்போர்.

**திறவு சொற்கள்**: சித்தி, ஜோதிடம், புறபூசை, காயகற்பம்.

**முன்னுரை:**

தமிழ் மொழியின் தொன்மைக்காலம் மற்றும் தொன்மை நூலான தொல்காப்பியம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல இலக்கியங்கள் வகைப்படுகின்றன.அதில் ஒன்று தான் சித்தர்களை பற்றி கூறப்படும் நூல் சித்தர் இலக்கியம் ஆகும். எண்ணில் அடங்காத சித்தர்கள் இவ்வுலகில் வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு குறிப்பை மக்களுக்கு எடுத்துரைக்கின்றனர். அவர்களின் குறிப்புகளை இலக்கால தலைமுறையினர் பின்பற்றுகின்றனர் சித்தர்களுடைய தத்துவம் எடுத்துரைப்பது என்னவென்றால் பிறவி என்ற ஒன்று இருந்தால் மறுபிறவி என்பதும் உண்டு எனக் கூறுகின்றனர்.ஒருவர் மனிதர்களாக பிறந்தால் ஒருவரின் மரணத்தை அவரே தீர்மானிக்க வேண்டும் சித்தர்கள் எடுத்துரைக்கின்றனர. சித்தர்கள் உடல்நலம், மனநலம், யோகம் வானியல் அறிவு. துறைகள் சார்ந்த சித்தர்கள் என சிந்தனைகளை தம்

பதிவுகளை வழி எடுத்துரைத்துள்ளார்.

சித்தர் பாடல்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு பெரும் வழிகாட்டியாகஅமைகின்றன. பின்னர் எழுந்த குறவஞ்சி பள்ளு நொண்டி நாடகங்கட்கு முன்னோடியாக விளங்குகிறது. பாரதிக்கு வழிகாட்டிய-ஊக்க மூட்டியனவும் இவையே எனலாம்.சித்தர்களின் பெருமை பல புராணங்களில் கூறப்பட்டுள்ளது. சித்தர்கள் பல அற்புதங்களைச் செய்யக்கூடியவர்கள் ஆகவே புராணம்படித்தவர்கள் பல அற்புதங்களைச் செய்கின்றவர்கள். மட்டமான உலோகங்களை உயர்ந்த பொன்னாக்கும் திறமை படைத்தவர்கள். சித்தர்கள்.என்று தான் அறிவார்கள், அவர்கள் உண்மையாக நாட்டு மக்களுக்குச் செய்திருக்கும் பணியைப் பலர் அறிந்தது இல்லை.

சித்தர்கள் சாகாநிலையைப் பெற்றவர்கள் அழியாத உடம்பைப் பெற்றவர்கள். உடம்பை அழிந்துபோகாமல் பாதுகாக்கும் வழியை அறிந்தவர்கள். தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து நடமாடும் சக்தி படைத்தவர்கள். இதற்குக் கூடுவிட்டுக் கூடு பாடிம் பாய்தல் என்று பெயர் சித்தர்களுக்கு வானமார்க்கமாகச் செல்லும் சக்தியும் உண்டு முக்காலங்களைப் பற்றி அறியும் ஞானமும் உண்டு பல விதமான அற்புதங்களைச் செய்யும் ஆற்றலும் உண்டு என்று கூறுகின்றன.

உலகில் பல ஞானிகளும் துறவிகளும் வாழ்ந்து சென்றுள்ளனர் அதில் குறிப்பிடத்தக்கவர்கள் சித்தர்கள் என்லம். “மனிதன்” என்ற நிலையைக் கடந்து சித்துப் பெற்று “சித்தர்கள்” என்ற பெயர் பெற்றனர். யோகநிலையில் ஈடுபட்டும் ஞானம் உணர்ந்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்றால் “சித்துக்கள்” பொருள்.”சித்து” என்பதன் பொருள் கொள்ளும் தன்மை எனலாம். செய்பவர்கள் என்று எல்லாவற்றையும் உணர்ந்துசித்தத்தை ஒடுக்கி, சித்தத்தில் சிவநிலை காண்பவர்கள் சித்தர்கள் என அழைக்கப்படுகின்றன. மனதை உலகப்பற்றில் இருந்து நீக்கி கடும் தவங்களால் இறைவனை உணர்ந்தவர்கள் சித்தர்கள் என்லாம்.சித்து என்னும் சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும் மக்களின் எண்ணம், செயல், வாழ்வு இம்மூன்றினையும் ஒரே மாதிரியாகச் செயல்படுத்தும் விதத்தில் சித்தர் பாடல்கள் அமைந்துள்னை. இவர்கள் ஓரிடத்தில் கூட நிலையாக வாழ்ந்தாரில்லை. பெரிய மலைகளில் உள்ள குகைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு வாழ்ந்து வந்த சித்தர்களின் வாழ்வியல் முறை பற்றி ஆராய்வதே இனி நோக்கமாகும்.

**குதம்பைச் சித்தர்:**

பதினெண் சித்தர்களில் ஒருவர் குதம்பைச்சித்தர். குதம்பை என்பது மகளிர் காதுகளில் அணியும் வளையம்.

பிறப்பு : ஆடி மாதம், விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர் இவர் அழுகுணி சித்தரின் சீடர். இவரது பாடல்களில் குதம்பை அணிந்த பெண்ணை குதம்பை அல்லது குதம்பை அல்லது குதம்பாய் என அழைத்து பாடல்களை பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களில் தமக்குத் தாமே உபதேசம் போல் அமைந்த பாடல்கள் சிறப்பு பெற்றது.

“குதம்பை சித்தர் என்பது சித்தயோக உலகில் புகழ்பெற்ற பெயர். அவர் 18 யோக சித்தர்களில் ஒருவராக அறியப்படுகிறார். இடைகாடரின் சிடரான அழுக்குணி சித்தரால் தீட்சை

பெற்றார். இவரது வாழ்க்கையைப் பற்றி அதிகம் அறியப்படவில்லை என்றாலும் சித்த தத்துவத் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. பட்டயம், முத்திரை, உத்தியம்(இலக்கு), ஆசை, மோகம், ஏகாந்தத் துறவு, ஞானம், பல்லாக்கு- ஊர்தி, கோலம்(ஒப்பனை), கைத்தாளம்(மகிழ்ச்சி), - போன்றவை வீண் ஆடம்பரங்கள் என்று இவர் குறிப்பிடுகிறார்.

**சித்த மருத்துவத் தத்துவம்**

குதம்பை சித்தர் பண்டைய சித்த மருவத்துவம் மற்றும் ஆன்மிகத்தின் பயிற்சியாளர் ஆவார். உகந்த ஆரோக்கியம் மற்றும் ஆன்மீக வளர்ச்சியை அடைய மனம், உடல் மற்றும் ஆன்மா இடையே சமநிலையின் கருத்தை அவர் நம்பினார். இந்த சமநிலையை அடைவதில் உள் இணக்கம், தியானம் மற்றும் உடல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

குதம்பைச் சித்தரின் சித்த மருத்துவத் தத்துவம் மூலிகைகள். தாதுக்கள் மற்றும் விலங்கு பொருட்கள் போன்ற இயற்கை வைத்தியங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது நோய்களைக் குணப்படுத்த இயற்கையின் சக்தியை அவர் நம்பினார். மன மற்றும் உணர்ச்சி சமநிலையை அடைய பிராணயாமா மற்றும் தியானம் போன்ற யோகாப் பயிற்சிகளைப் பயன்படுத்தவும் அவர் பரிந்துரைத்தார்.

**குதம்பைச் சித்தரின் வாழ்வியல் :**

“கடவுளுக்கு உருவமில்லை; அருவமானவர். வெட்ட வெளியே கடவுள் என்ற உண்மையை அறிந்தவர்களுக்கு ஆடம்பரமான பட்டயங்கள் விருதுகள் – எல்லாம் எதற்காக?” என்று கேட்கிறார். இதனை,

வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்

“பட்டயமேதுக்கடி -குதம்பாய்!
பட்டயமேதுக்கடி!”. (குதம்பை-215)

என்ற பாடலால் காணலாம். இதுவே குதம்பைச் சித்தர் பாடலில் முதல் பாட்டு; மதவாதிகளின் ஆடம்பரத்தை வெறுக்கும் பாட்டு ஆகும்.

“உண்மைப் பொருளை அறிந்து விளங்குகின்ற மெய்ஞானிக்கு உடலை வலுப்படுத்தக் கூடிய காயகற்பம் என்னும் மருந்துக் கூட வேண்டாம்; கவலையற்ற அவர்கள் உள்ளமே அவர்களுக்கு நோயற்ற வாழ்வை அளிக்கும். நீண்ட வாழ்நாளை அளிக்கும் உண்மைப் பொருளை அறியாத அஞ்ஞானிகள்தாம் காயசுற்பந் தேடி அலைவார்கள்” என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார் குதம்பைச் சித்தர். இதனை,

காலங்கள்கண்டுகடித்த துறவோர்க்குக்

“கோலங்கள் உண்டாமடி– குதம்பாய்
கோலங்கள் உண்டாமடி”. (குதம்பை-125)

என்ற பாடலால் காணலாம்.

இவ்வாறு பல சிறந்த கருத்துக்கள் குதம்பைச் சித்தர் பாடலிலே காணப்படுகின்றன."கடவுளின் உண்மையை அறிந்தவர்கள் வீண் ஆடம்பரமான விருதுகளை ஏந்திக்கொண்டு திரிய மாட்டார்கள்.""உண்மையுணர்ந்த ஞானிகளுக்கு உடலை வளர்க்கும் காயகற்பங்கள் வேண்டுவதில்லை.""யோகப் பயிற்சியிலே தேர்ந்தவர்கள் எத்தகைய சோர்வும் இன்றி வாழ்வார்கள்.""யோகப் பயிற்சியிலே தேர்ந்தவர்கள் காலனையும் வெல்வர்; அவர்கள் வீண் வேடங்கள் இல்லாமல் அடக்கமுடன் வாழ்வார்கள்." இவ்வுண்மைகளை மேலே எடுத்துக் காட்டிய குதம்பைச் சித்தர் பாடல்களால் அறியலாம்.

தவநிலை ஒன்றனைச் சாராத மாந்தர்கள்

"அவநிலை யாவாரடி குதம்பாய்
அவநிலை யாவாரடி." (குதம்பை -121)

என்ற பாடலில்குதம்பாய்! தவநிலை எதையும் சாராதவர்கள் இழிந்த நிலையை அடைவார்கள் என்கிறார்குதம்பைச் சித்தர்.

யோகந் தான் வேண்டி உறுதிகொள் யோகிக்கு

"மோகந்தான் இல்லையடி குதம்பை
மோகந்தான்இல்லையாடி". ( குதம்பை -124)

இப்பாடலில்குதம்பாய்! யோகத்தை விரும்பிச் செய்யும் செயல்கள் மன உறுதியுடைய யோகிக்கு மோகம் தான் இல்லை என அளிக்கின்றன.

பற்றுறில் துன்பமும் பற்றறில் இன்பமும்

"முற்றாகஎய்துமடி – குதம்பை
முற்றாக எய்துமடி." (குதம்பை -130)

இப்பாடலில்குதம்பாய்உன் மனதில்பற்று உற்றால் துன்பமும் பற்று நீங்கினால் இன்பமும் முழுதாக வந்து கிடைக்கும் என்கிறார் குதம்பைச் சித்தர்.

**முடிவுரை:**

குதம்பைச் சித்தர்நிறைவாக மாயூரம்என்றஊரில்சமாதியடைந்தார்.உண்மையறிவு பெற்று இறைவனை நாடும் மெய்ஞ்ஞானிக்கு உலகப் பொருள்களும், சடங்குகளும் தேவையில்லை என்பது இவரது கருத்து.226கண்ணிகள் உள்ளன. இவருடைய பல பாடல்கள் யோக நெறி, பக்தி நெறி, புறப்பூசை போன்றவற்றைப் பழிக்கும் வகையில் அமைந்துள்ளன. சித்த நெறியினர் காயகற்பம் (உடலினை உறுதியாக்கி, முதுமை வாராமல் தடுக்கும் சித்தவைத்திய மருந்து) தேடி அலைய வேண்டியதில்லை என்று குதம்பைச்சித்தரின்வாழ்வியல்முறைகளைபின்பற்றுவோம்.

**துணைநூற்பட்டியல்:**

1.சாமி.சிதம்பரனார் - சித்தர்கள்கண்டவிஞ்ஞானம்தத்துவம் , மணிவாசகர்பதிப்பகம், சென்னை – 600108 முதல்பதிப்பு- ஆகஸ்ட், 2001

2.பி.என்.பரசுராமன். -. சித்தர்கள்வாழ்க்கை, விகடன் பரசுராமன், சென்னை-600002,முதல்பதிப்பு- ஜீன்,-2007

3 ரிஷபானந்தர் -. சித்தர்கள்கண்டமானுட ரகசியம், சங்கர் பதிப்பகம், சென்னை-600004, முதல் பதிப்பு- ஜீன் -2001